[2003 ஏப்ரல் 25

2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ.1.06 கோடி நட்டத்தில் இயங்கி உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) கோவை மாநகர், கணபதி பகுதி இரட்டைக் கொலைகள்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகர், கணபதி பகுதியிலே இரட்டைக் கொலைகள் நடைபெற்று இன்று ஆறாவது நாள். ஞாயிற்றுக்கிழமை மாலையிலே கொலைகள் நடைபெற்றன. மிகவும் மர்மமான முறையிலே அந்தக் கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் புலன் விசாரணையிலே எந்தவிதமான முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுகுறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் உங்களிடத்திலே கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்பதைச் சொல்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஐந்து நாட்களாகிவிட்டன, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; அரசுக்குத் தகவல் வருவது என்பது, ஒரு புலன் விசாரணை சம்பந்தமாக, தொடர்புடைய முழுமையான விளக்கங்கள் வந்ததற்குப் பிறகுதான் அரசுக்குத் தகவல் வரும். அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்.

2003 ஏப்ரல் 25]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஐந்து நாட்கள் கழித்தும்கூட, எடுத்துக்கொள்ளவில்லையென்று சொன்னால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே பொருள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; என் ஆய்வில் இருக்கிறது. எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான். இது உங்கள் தொகுதி சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் நீங்கள் எழுப்புகிறீர்கள். எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: தொகுதி மட்டும் அல்ல. கோவை நகரத்திலே பீதி நிலவுகிறது. அந்த அளவிற்கு அங்கே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாட்டில் எத்தனையோ முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று பிறகு சொல்கிறேன்.

(ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் இன்று பயின்று கொண்டிருக்கக்கூடிய மாணவர்களும், அதேபோலப் பயிற்சி டாக்டர்களும் போராட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; பத்திரிகைகளிலேயெல்லாம் பார்த்தோம். அமைச்சர் அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; இப்போது எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் ஏதோ பேசிக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமாக